சுருக்கம்

பொதுப்பணிகள்– தமிழ்நாடு அமைச்சுப்பணி– திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு– திரு.சே.ஹரிவசந்த், த/பெ. காலஞ்சென்ற திரு.சு.சேகர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம்– பணியை வரன்முறை செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

பணிகள் அலகு, பணி9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்:115

நாள்: 11.10.2021
திருவள்ளுவராண்டு 2052,
பிலவ வருடம், புரட்டாசி–25

29 OCT

படிக்கப்பட்டது:

முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு4/37630/ 2018, நாள் 14.09.2020.

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு, முசிறி வட்டம், இரவுக் காவலராகப் பணிபுரிந்து, பணியிடையே 30.12.2007 அன்று காலமான அரசு ஊழியர் திரு.சு.சேகர் என்பவரின் மனைவி, திருமதி.எஸ்.தமிழரசி என்பவர் தனது மகன், திரு.சே.ஹரிவசந்த் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 26.11.2010 அன்று விண்ணப்பம் அளிக்கப்பட்ட நாளில் திரு.சே.ஹரிவசந்த் என்பவருக்கு 18 வயது நிறைவடையாத காரணத்தினால், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் குறிப்பாணை மூலம் தனியரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்கண்ட குறிப்பாணையினை எதிர்த்து, தனியர் திரு.சே.ஹரிவசந்த் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை மனு எண்.16993/2013–ன் மூலம் வழக்குத் தொடர்ந்ததன் பேரில், வழக்கின் தீர்ப்புரை 25.01.2017 அன்று வெளியிடப்பட்டு, தீர்ப்புரையில் இரண்டாம் பிரதிவாதியான திருச்சி மாவட்ட ஆட்சியரை எட்டு வார காலத்திற்குள் மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலனை செய்யுமாறு ஆணையிடப்பட்டதன் பேரில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பினை செயல்படுத்தும் பொருட்டு, தனியர் திரு.சே.ஹரிவசந்த் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 30.01.2013 அன்று விண்ணப்பம் அளித்ததைத் தொடர்ந்து தனியர், திரு.சே.ஹரிவசந்த் என்பவருக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 16.09.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பணிநியமனத்தை பணியேற்ற நாளான 16.09.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினை பெற்றுத் தருமாறும், மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2. மேலும், திரு.சே.ஹரிவசந்த் என்பவருக்கு காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையின்படி பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 16.09.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக, இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாலும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்பதாலும், திரு.சே.ஹரிவசந்த் என்பவருக்கு பணிநியமனம் அளிக்கும்படி கேட்டு விண்ணப்பம்

// த.பி.பா. //

செய்ததில், நியமன அதிகாரி அவருக்கு இளநிலை உதவியாளராக பணிநியமனம் அளித்துள்ளார் என்றும், பணி நியமனம் அளிக்கப்பட்ட நாளில் உரிய கல்வித்தகுதியான 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் (மார்ச் 2010) என்றும், எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)(b)-ஐ தளர்வு செய்து, தனியரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான 16.09.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினை பெற்றுத் தருமாறு அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு மற்றும் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை ஆகியவை அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு, முசிறி வட்டம், இரவுக் காவலராகப் பணிபுரிந்து, பணியிடையே 30.12.2007 அன்று காலமான அரசு ஊழியர் திரு.சு.சேகர் என்பவரின் மகன், திரு.சே.ஹரிவசந்த் என்பவர் விண்ணப்பம் அளித்த நாளில் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய குறுமவயது 18-னை நிறைவு செய்யாத காரணத்தினால், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58-இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)(b) மற்றும் பணப்பலன்கள் பணியேற்ற நாள் முதல் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28(2)ஐயும் தளர்வு செய்து தனியர், திரு.சே.ஹரிவசந்த் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியேற்ற நாளான 16.09.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.3783/க்யூ-2/2021-1, நாள் 22.03.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.10009/ஜி2/2021-1, நாள் 21.04.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி.
திரு.சே.ஹரிவசந்த், இளநிலை உதவியாளர்,
(மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி மூலமாக)

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ந.க. அ3/13261/2013
அனுப்பப்படுகிறது.

நாள்: .11.2021

பிரிவு அலுவலர்.

பெறுநர்:
திரு.சே. ஹரிவசந்த்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.

மாவட்ட ஆட்சியருக்காக,
திருச்சிராப்பள்ளி.